# கடற்கரை கவியரங்கு– 639

**நாள்: 07-07-2024**

# - தடை களைந்து வெல்வோம்!

தடை போடும் மனமே தடுமாறிப் போகும்!
விடை தேடும் மனமே வெற்றியைக் காணும்!
மடை திறந்து வெள்ளம் மறுவின்றி ஓட,
தடை யொன்று தானே அங்கேயும் வேண்டும்!

தளை போன்று ஒரு இயல்பினில் சேர்க்க,
களம் காண மனமே கருவியைச் செய்யும்!
உளம் சூடும் கனவை உன்னதம் ஆக்கிட,
வளமான சிந்தையே வாகையில் நிறையும்!

வருகின்ற துன்பத்தை வளமின்றிச்  செய்ய,
கருவாக மனத்தில் செயல்பட வேண்டும்!
உருவாகும் நற்சிந்தை உலகாள வைக்கும்!
அறிவின் துணை பூண்டால் ஆனந்த வாழ்வே!

செறிவாய்ச் செயல்கள் செம்மாந்து நிறையும்!
அறிவுகொள் மனத்தின் முகவரியை ஆக்கும்!
மறிகடலின் ஆர்ப்பரிப்பும் கரையில் ஓயும்!
திறமிக்க சிந்தைக்கு அறிவே களமாகும்!

தடையாகும் தளைகளை தவிர்க்க முயல,
விடையாகும் வாழ்வின் அறங்கள் யாவும்!
வடிக்கும் சல்லடையாம் தடைகள் தாமே!
பிடியின்றி போகுங்கால் பேதைமை ஆகுமே!

பெருமை சிறுமை பேதைமை விளைக்கும்!
அரிய வாழ்வில் ஆனந்தம் தேடிடநம்,
அறிவின் துணையால் அனைத்தும் வெல்வோம்!
அறங்கள் காத்தும் மானிடமும் காப்போம்!

**- கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**

**02-06-2024 (மதியம்:02-45)**